**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM,(MAHILA COURT),COIMBATORE

S.C.No. 109 of 2019

| Name of Witness | PW-15 சத்யபாமா | Caste | |
|---|---|---|---|
| Father / Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Cell | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.06.2022

**முதல் விசாரணை-**

நான் தற்போது புலியகுளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019 ம் ஆண்டு E2 பீளமேடு சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையத்தில் தலைமைக்காவலர் எண் 2199 ஆக பணிபுரிந்த போது கோவை ஆவாரம்பாளையம், இளங்கோ நகர் 3 வது தெருவில், 25.01.2019 அன்று E2 பீளமேடு சட்டம் ஒழுங்கு காவல் நிலையம் குற்ற எண் 127/2019 இ.த.ச.பிரிவு 302 வழக்கில் இறந்து போன செல்வி என்பவரின் பிரேதத்தை சம்பவ இடத்திலிருந்து பிரைவேட் ஆம்புலன்ஸ் மூலமாக 16.30 மணியளவில் உரிய தபால்களை மருத்துவ பரிசோதனை செய்யும் அதிகாரிகளிடம் காண்பித்தும், அன்று சவக்கிடங்கில் வைக்கப்பட்டது. பின்னர் 26.01.2019 அன்று பீளமேடு காவல் நிலையத்தில் உரிய தபால்களை பெற்றும், மருத்துவ பரிசோதனை செய்யும் மருத்துவரிடம் காண்பித்தும், பிரேதத்தை அடையாளம் காட்டியும், உரிய தபால்களை ஒப்படைத்தும், அதன் அங்கமச்ச அடையாளங்களை காண்பித்தும், பின்னர் பிரேத பரிசோதனை செய்யும் வரை உடனிருந்தும், பிரேத பரிசோதனைக்குப் பின்னர் இறந்து போன செல்வி என்பவரின் மகன் பிரபாகரனிடம் பிரேதத்தை ஒப்படைத்தும், உத்தரவின்படி நிலையம் சென்று, வாய்மொழியாக ஆய்வாளரிடம் அறிக்கை சமர்ப்பித்தேன்.

**கு.வி.**

நான் சுமார் 16.30 மணிக்கு சம்பவ இடம் சென்றேன். நான் சடலத்தை பெற்றுக் கொண்டேன் என்று ஆய்வாளர் கொடுத்த உத்தரவினை குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சடலத்தை பெற்றுக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் உத்தரவின்படி பின்னிட்டு ஒரு நேரத்தை

**சடலம் பெற்றுக்கொண்டதாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.**

29/06/2022